கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

கலை கலாசார பீடம் /புவியியற்துறை

**மூன்றாம் வருட, முதலாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு**

**2009/2010 (Feb. 2014)**

| | |
|---|---|
| **EOS 3104: குடித்தொகைப் புவியியல்** (Population Geography) | நேரம் **03** மணித்தியாலங்கள் |

- ஒவ்வொரு பகுதியிலுமிருந்து இவ்விரு வினாக்களைத் தெரிவுசெய்து எல்லாமாக **நான்கு(04)** வினாக்களுக்கு விடை தருக.
- எழுத்து தெளிவில்லாதவிடத்து புள்ளிகள் குறைக்கப்படும்.

## பகுதி-1

1)

a) "குடித்தொகைத்தரவுகள் உலக நாடுகளின் பல்துறைசார் அபிவிருத்திக்கு அடிப்படை மூலமாக விளங்குகின்றன". இக்கூற்றினைப் பொருத்தமான உதாரணங்கள் மூலம் விளக்குக.

(10 புள்ளிகள்)

b) குடித்தொகைத் தரவுகள் பெற்றுக் கொள்ளப்படும் பிரதான முறைகளை சுருக்கமாக விபரித்து இலங்கையில் குடிக்கணிப்பு மேற்கொள்ளப்படும் முறைகள் தொடர்பாக விபரிக்குக.

(15 புள்ளிகள்)

2)

a) கருவளம், கருவளச்செழிப்பு என்பவற்றுக்கிடையிலான வேறுபாடுகளை விளக்குக.

(05 புள்ளிகள்)

b) கருவளத்தினை அளவிடும் முறைகளுள் ஏதாவது மூன்றினைக் குறிப்பிட்டு அதன் குறை, நிறைகள் பற்றி விளக்குக.

(08 புள்ளிகள்)

c) இலங்கையின் கருவளவாக்க நிலை படிப்படியாகக் குறைவடைந்து செல்கின்றமைக்கான காரணங்களை விளக்குக.

(12 புள்ளிகள்)

3)

a) குடித்தொகைக் கூட்டு (Population composition) என்பதனை வரையறை செய்து, அதனை வகைப்படுத்துக.

(10 புள்ளிகள்)

b) குடித்தொகைக் கட்டமைப்பு மற்றும் கூட்டு (Population structure & composition) ஆகியவற்றில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளைக் குறிப்பிட்டு, அவற்றினைப் பற்றிச் சுருக்கமாக விளக்குக.

(15 புள்ளிகள்)

## பகுதி- 11

**4)** குடித்தொகை தொடர்பாக முன்வைக்கப்பட்ட கோட்பாடுகளை விபரித்து, உலக குடித்தொகை வளர்ச்சியினைப் பிரதிபலிப்பதில் மால்துாசிய கோட்பாட்டின் பொருத்தப்பாட்டினையும், அதற்கு எதிராக எழுந்த விமர்சனங்களையும் தர்க்க ரீதியாக ஆராய்க.

(25 புள்ளிகள்)

**5)** குடித்தொகைக் கூம்பானது குறித்த பிரதேசத்தின் குடியியல் நிலைமைகளை வெளிப்படுத்துவதில் எந்தளவுக்கு முக்கியத்துவம் வாய்ந்ததாகக் காணப்படுகின்றது என்பதனை தகுந்த உதாரணங்கள் தந்து தெளிவுபடுத்துக.

(25 புள்ளிகள்)

**6)** இலங்கையில் கடந்த 30 வருட காலங்களாக இடம்பெற்று வந்த இடப்பெயர்வுகளின் தன்மைகளையும், அதற்கான காரணங்களையும் பொருத்தமான உதாரணங்களுடன் ஆராய்க.

(25 புள்ளிகள்)